அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

# வகுப்பு 8

காலம்: 2.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்வு செய்க:** **10×1=10**

1) வானில் முழு நிலவு அழகாக ................ அளித்தது.
அ) தயவு ஆ) தரிசனம் இ) துணிவு ஈ) தயக்கம்

2) ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ................
அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி

3) சொல் வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ................ தகுதி அறிந்து பேச வேண்டும்.
அ) சொல்லின் ஆ) அவையின் இ) பொருளின் ஈ) பாடலின்

4) முழவு+அதிர என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................
அ) முழவுதிர ஆ) முழவுதிரை இ) முழவதிர ஈ) முழவுஅதிர

5) கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ................
அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

6) உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களில் ஒன்று ................
அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு

7) வரு முன்னர் எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ................
அ) எடுத்துக்காட்டு உவமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
இ) உவமை அணி ஈ) உருவக அணி

8) விழுந்ததங்கே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................
அ) விழுந்த + அங்கே ஆ) விழுந்த + ஆங்கே
இ) விழுந்தது + அங்கே ஈ) விழுந்தது + ஆங்கே

9) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ................
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

10) பின்வருவனவற்றுள் இறந்த கால வினைமுற்று ................
அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** **5×1=5**

11) சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் ................
12) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ................
13) யாணர் என்பதன் பொருள் ................
14) காந்தியடிகள் ................ போற்ற வாழ்ந்தார்.
15) எட்டாம் வேற்றுமை ................ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.

**இ) பொருத்துக:** **5×1=5**

16) வினைமுற்றுத் தொடர் - உலகம்
17) வினையெச்சத் தொடர் - பெரிய
18) முற்றெச்சம் - பாடி முடித்தான்
19) குறிப்புப் பெயரெச்சம் - வென்றான் சோழன்
20) வையம் - எடுத்தனன் உண்டான்

## பகுதி - II

**குறுகிய விடையளி:**

**அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

21) முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?
22) பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?
23) பகத்சிங் கண்ட கனவு யாது?
24) நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
25) சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?

**ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

26) தமிழ்நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?
27) ஓவிய எழுத்து என்றால் என்ன?
28) திரு.வி.க. சங்கப்புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.
29) நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
30) எம்.ஜி.ஆர் நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி: 2×2=4

31) சந்திப்பிழை என்றால் என்ன?

32) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

33) தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - III

அ) சிறுவினா: 3×4=12

34) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை? (அல்லது)
இந்தியத் தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

35) மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக. (அல்லது)
தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.

36) இயல்புப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது)
ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

ஆ) சிந்தனை வினா: (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2×5=10

37) ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள்?

38) கைவினைக்கலைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

39) நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?

## பகுதி - IV

அடிபிறழாமல் எழுது: 4+2=6

40) போர்தற்கு .......... எனத் தொடங்கும் நோயும் மருந்தும் மனப்பாடப் பாடலை எழுதுக.

(அல்லது)

வழிவர் .......... எனத் தொடங்கும் படைவேழம் மனப்பாடப் பாடலை எழுதுக.

41) விடல் என முடியும் குறளை எழுதுக.

## பகுதி - V

மொழிப்பயிற்சி: (எவையேனும் நான்கு மட்டும்) 4×2=8

42) **கலைச்சொல் தருக:**
அ) Flute ஆ) Valley

43) **கோடிட்ட இடத்தை நிரப்புக:**
விலங்கொடு .......... அனையர் ..........
கற்றாரோடு ஏனை யவர்.

44) **கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக:**
அ) கல்லாமை ஒழிக .............
ஆ) பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்து விட்டனவே! .............

45) **பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக:**
அ) பகைவர் நீவிர் அல்லர்.
ஆ) பானையை உடைத்தது கண்ணன் அல்ல.

46) **பின்வரும் மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**
அ) கொடி கட்டிப் பறத்தல் -
ஆ) வாழையடி வாழையாக -

47) **ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக:**
அ) திங்கள் ........... ஆ) ஆறு .............

## பகுதி - VI

விரிவான விடையளி: 3×8=24

48) அறிவுசால் ஔவையார் என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

மூளையில் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

49) கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

(அல்லது)

தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

50) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:**
முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்தில் உள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை.

(அல்லது)

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

----------

www.Padasalai.Net